## TAMIL NADU POLLUTION CONTROL BOARD

**Minutes of the Public Hearing Meeting of M/s. Ram Rough Stone and Gravel Quarry located at S.F.Nos. 289/2, Karudayampalayam Village, Pugalur Taluk, Karur District over an Extent of 4.09.0 hectares held on 29.01.2026 at 12.30 PM in M/s.Bharani Mahal, Near Palamalai, Pavithiram Village, Pugalur Taluk, Karur District.**

**Participants:**

1. Thiru. G. Vimalraj,
   District Revenue Officer,
   Karur.
2. Dr. S. Sathiyan
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Karur.
3. General Public - (as per annexure)

**District Environmental Engineer: Tamil Nadu Pollution Control Board, Karur.**

The District Environmental Engineer, in his welcome address, extended greetings on behalf of the District Administration and the Tamil Nadu Pollution Control Board to our District Revenue Officer, Karur, who has come to preside over this public hearing meeting for the of M/s. Ram Blue Metals rough stone and gravel quarry, extents 4.09.0 hectares in Survey No. 289/2, Karudayampalayam Village, Pugalur Taluk, Karur District to all the public who have come to express

their views, to environmental volunteers, government officials, police personnel and quarry owners implementing this project.

As per the Ministry of Environment, Forest and Climate Change (MoEF&CC) under the Environmental Impact Assessment (EIA) Notification 2006, eight categories of industries require prior environmental clearance. Accordingly, for certain industries, a public hearing must be conducted before obtaining Environmental Clearance (EC). In line with this, if a quarry or cluster of quarries exceeds 5 hectares individually or as a cluster within 500 meters, it falls under Category B1 and requires prior environmental clearance. On this basis, following the application submitted by Thiru/L. Ram Blue Metals for the ordinary stone and gravel quarry, this public hearing is being held today. Notices were published on 18-12-2025 in The Indian Express and Dinamalar newspapers 30 days in advance. Copies of the project-related Environmental Impact Assessment report were placed in the public domain one month prior at the District Industries Centre, Taluk Development Office, District Collectorate, and several other offices. Public announcements about this meeting were made last Friday through public address systems, pamphlets, and wall posters. The executive summary of the project in Tamil and English has been uploaded on the Tamil Nadu Pollution Control Board website for public viewing.

The project consultant will now explain the project and the Environmental Impact Assessment report to everyone via PPT. Following that, the public may submit their views orally or in writing. He humbly requested those submitting oral views to clearly and concisely state their name, village, and opinions, keeping in mind the value of time. He then invited the District Revenue Officer to preside over and conduct the public hearing meeting.

**District Revenue Officer:**

The District Revenue Officer conveyed greetings to all the public, stated that the project consultant would explain the project via PPT, and that the public could then submit their views.

**Environmental Consultant, Geo Technical Mining Solutions:**

The project consultant explained the project and the conducted Environmental Impact Assessment to the public via PPT. He also elaborated on the proposed air and water pollution control measures for the stone quarry, as well as the benefits of the quarry project.

**Views of Participants:**

1. **Thiru. B. Sambath S/o. Balasubramaniam, Karur:**

   I am the Karur District Secretary of the Forwarded Block Party. I request permission for this Ram Blue Metals company. Currently, due to the ban on river sand across Tamil Nadu, all construction materials are affected. Only if permission is granted to companies like Ram Blue Metals will M-Sand, P-Sand, and other construction materials be available without interruption. People will benefit. It will provide livelihoods and employment to the surrounding public.

2. **Thiru. V. Gnanashekaran S/o. Vibushan, Karudaiyampalayam:**

   I am from Karudaiyampalayam. If this quarry operates, it will provide employment and livelihoods to the surrounding public. Construction materials will be available without shortage. Therefore, permission may be granted for this stone quarry.

3. **Thiru. R.Sakthivel S/o. Ramasamy, Punnam:**

   I am from Karudaiyampalayam. This quarry's operation causes no harm to anyone. Therefore, permission may be granted for this stone quarry.

4. **Thiru. E. Sivakumar S/o. Eswaran, Punnam:**

   I am from Punnam village. Permission may be granted for this stone quarry.

5. **Thiru. V. Ayyappan S/o. Velmani, ThanthonriMalai:**

   I am from ThanthonriMalai. This quarry causes no harm to the environment. Therefore, permission may be granted for this stone quarry.

6. **Thiru. G. Manojkumar S/o. Govindaraj, Kandampalayam:**

   I am from Kandampalayam. This quarry causes no harm to our village people. Therefore, permission may be granted for this stone quarry.

7. **Thiru. S. Devendran S/o. Sasikumar, Kandampalayam:**

My name is S. Devendran. I am from Kandampalayam. Permission may be granted for this stone quarry, he said.

8. **Thiru. Rajesh S/o. Vijayan, Karur:**

Permission may be granted for this stone quarry,.

9. **Thiru. M. Haritharan S/o. Murugesan, Pavithiram:**

My name is Haritharan. Permission may be granted for the Ram Blue Metals quarry.

10. **Thiru. S. Manikandan S/o. Sivakumar, Punnam:**

My name is Manikandan. I am from Punnam village. Permission may be granted for the quarry to operate.

11. **Thiru. Senthil S/o. Subramaniam, Kulathurpettai:**

Permission may be granted for this stone quarry.

12. **Thiru. D. Raja S/o. Durai, Kuttakadai:**

My name is Raja. Permission may be granted for this stone quarry.

13. **Thiru. K. Ramesh S/o. Kandasamy, Pavithiram:**

My name is Ramesh. I am from Pavithiram. Many families depend on this quarry. Therefore, permission may be granted for this stone quarry; we have no objections.

14. **Thiru. S. Suresh S/o. Subramani, Pavithiram:**

Greetings to all. My name is Suresh. I am from Pavithiram. Permission may be granted for this stone quarry.

15. **Thiru. Kumaresan S/o. Nallasamy, PavithiramMalachipudur:**

Greetings to all. My name is Kumaresan. Permission may be granted for this stone quarry.

16. **Thiru. S.Balakrishnan S/o. Subramani, Panchaiyampatti:**

My name is L. Balakrishnan. I am the CPI G. Paramathi Union Secretary. This quarry has long experience. It has been operating in this area since 1990, nearly 30 years. It operates without any hindrance to surrounding farmers or the

public. It has functioned without any harm so far. Therefore, permission may be granted for this stone quarry.

17.**Thiru. N.Kathirvel S/o. Natarajan, Kumara Koundanpudur:**

Greetings to all. There are no objections to this stone quarry operating; permission may be granted.

**District Revenue Officer:**

Greetings to all. On behalf of the administration, I welcome the quarry owners M/sPrabhakaran and M/s. Ram Blue Metals, Project consultants, Environmental Engineer, other Department Officials, Police Personnel, and the Public attending this public hearing in PugalurTaluk, Karur District, through the Tamil Nadu Environment Department. The views expressed by the public here will be consolidated and sent to Chennai, where the State Environmental Impact Assessment Authority (SEIAA) will make the final decision and issue orders. Your views have been recorded here, and written letters have been received. If there are any demands, you may approach the Environment Department. Appropriate action will be taken on such petitions.

**District Environmental Engineer:**

He informed to the public that all proceedings from morning to afternoon, including the public's views, have been recorded on minutes and will be submitted in Tamil and English, with the District Collector's approval, to the State Environmental Impact Assessment Authority, Chennai. With this, the public hearing meeting concludes successfully.

**District Environmental Engineer ,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Karur District.**

**District Revenue Officer,**
**Karur District.**

55



**கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், பவித்திரம் கிராமம், பாலமலை அருகில் அமைந்துள்ள பரணி மஹாலில் 29.01.2026 அன்று பிற்பகல்12.30 மணியளவில் நடைபெற்ற கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், காருடையாம்பாளையம் கிராமம், புல எண். 289/2 ல் 4.09.0 ஹெக்டர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். ராம் ப்ளூ மெட்டல்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கு பெற்றோர்:

1. திரு.கு. விமல்ராஜ்,
   மாவட்ட வருவாய் அலுவலர்,
   கரூர்.

2. முனைவர். S. சத்தியன்,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   கரூர்.

3. பொதுமக்கள்– (இணைப்பில் உள்ளபடி)

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்: தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கரூர்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் தனது வரவேற்புரையில், கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், காருடையாம்பாளையம் கிராமம், புல எண். 289/2 ல் 4.09.0 ஹெக்டர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். ராம் ப்ளூ மெட்டல்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்து நடத்தவிருக்கும் நமது மாவட்ட வருவாய் அலுவலர், கரூர் அவர்களையும், தங்கள் கருத்துக்களை பதிய வந்திருக்கும் பொதுமக்கள் அனைவரையும், சுற்றுச்சூழல் தன்னார்வலர்களையும், அரசு அதிகாரிகளையும் காவல்துறை அதிகாரிகளையும் இந்த திட்டத்தினை செயல்படுத்தும் குவாரி உரிமையாளர்களையும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பிலும் வரவேற்றார்.

மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் (Ministry of Environment and Climate Change) படி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன் படி எட்டு வகையான தொழிற்சாலைகளுக்கு, சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் எனவும், அதன்படி ஒரு சில தொழிற்சாலைகளுக்கு பொதுமக்கள் கருத்து கேட்டு கூட்டம் நடத்திய பிறகு

Environmental clearance அதாவது சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பதும் விதியாகும். அதன்படி ஒரு குவாரி அல்லது ஒரு கிளஸ்டர் ஆஃப் குவாரிகளோ 5 ஹெக்டருக்கு மேல் தனியாகவோ அல்லது கிளஸ்டர் ஆகவோ இருந்தால் 500 மீட்டருக்குள் இருந்தால் பி–1 வகைப்பாட்டின் படி சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் எனவும், அதன்படி தி/ள். ராம் ப்ளூ மெட்டல்ஸ் அவர்கள் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி கோரி விண்ணப்பித்ததன் அடிப்படையில் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டமானது தற்பொழுது நடைபெற இருக்கிறது எனவும், இது தொடர்பாக தி இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமலர் செய்தித்தாள்களின் 18–12–2025 அன்று இது சம்பந்தமான வெளியீடு 30 நாட்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது எனவும், இது அல்லாமல் திட்டம் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் நகல்கள் ஒரு மாதத்திற்கு முன்பாகவே மாவட்ட தொழில் மையம், வட்டார வளர்ச்சி அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட பல அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறினார். இந்த கூட்டம் பற்றிய பொது அறிவிப்பு, ஒலிபெருக்கி, துண்டுப் பிரசுரம் மற்றும் சுவரொட்டி மூலமாக கடந்த வெள்ளிக்கிழமை அன்று செய்யப்பட்டது. மற்றும் இந்த திட்டம் தொடர்பாக தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அதன் சுருக்க அறிக்கையானது, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய இணையதளத்தில் பொதுமக்கள் பார்வைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தற்பொழுது இந்தத் திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்ட அறிக்கை பற்றியும், இந்த நிறுவனத்தின் உடைய திட்ட ஆலோசகர், தங்கள் அனைவருக்கும் PPT மூலமாக விளக்க இருக்கிறார் எனவும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வாய் மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பதிவு செய்யலாம் எனவும், வாய்மொழியாக பதிவு செய்யும் பொதுமக்கள் தங்களது பெயர், எந்த ஊரைச் சார்ந்தவர், தங்களது கருத்துக்களை தெளிவாகவும், சுருக்கமாகவும் காலத்தின் அருமை கருதி பதிவு செய்யுமாறு தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார். இப்பொழுது மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை இந்த பொதுமக்கள் கருத்துக்கு ஏற்ப கூட்டத்தை அவர்களை கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தி தருமாறு கேட்டுக்கொண்டார்.

<u>மாவட்ட வருவாய் அலுவலர் :</u>

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் தனது வணக்கத்தினை தெரிவித்துக்கொண்டு இத்திட்டத்தின் ஆலோசகர் இத்திட்டம் பற்றி PPT மூலமாக பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் பின்னர் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களைபதிவு செய்யலாம் என்றும் கூறினார்.

57

சுற்றுச்சூழல் ஆலோசகர், ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யுசன்ஸ்:

திட்ட ஆலோசகர் பொதுமக்களுக்கு PPT மூலம் திட்டம் குறித்தும் அத்திட்டத்திற்காக நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்தும் விளக்கி கூறினார். மேலும் உத்தேசிகப்பட்டுள்ள கல்குவாரியில் மேற்கொள்ளபடவுள்ள காற்று மற்றும் நீர் மாசு தடுப்பு முறைகளை பற்றியும் விளக்கி கூறினார். மேற்படி கல்குவாரி திட்டத்தின் பயன்களையும் விளக்கினார்.

நிகழ்வில் பங்குகொண்டோரின் கருத்துக்கள் பின்வருமாறு

1. திரு.B. சம்பத், S/o.பாலசுப்பிரமணியம், கரூர்:

எனது பெயர் B. சம்பத், நான் பார்வேடு பிளாக் கட்சியின் கரூர் மாவட்ட செயலாளராக உள்ளேன். இந்த ராம் ப்ளூ மெட்டல்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்று தமிழ்நாடு முழுவதும் ஆற்று மணலுக்கு தடையிருப்பதால் கட்டுமான பொருட்களுக்கு எல்லாம் தடைபட்டிருக்கிறது. இந்த ராம் ப்ளூ மெட்டல்ஸ் போன்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கினால் தான் மக்களுக்கு எம்–சேன்ட், பி–சேன்ட் போன்ற கட்டுமான பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்கும். மக்கள் எல்லாம் பயன்பெறுவார்கள். இதனால் சுற்றியுள்ள மக்களின் வாழ்வாதாரமும் மற்றும் அனைவருக்கும் வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

2. திரு.B. ஞானசேகரன், S/o. விபூசணன், காருடையாம்பாளையம்:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் ஞானசேகரன். நான் காருடையாம்பாளையத்தில் இருந்து வருகிறேன். இந்த குவாரி இயங்கினால் சுற்றுப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரம் உயரும். இதனால் கட்டுமான பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும். எனவே, இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

3. திரு.R. சக்திவேல், S/o.ராமசாமி, புன்னம்:

எனது பெயர் சக்திவேல். நான் காருடையாம்பாளையத்தில் இருந்து வருகிறேன். இந்த குவாரி இயங்குவதால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. எனவே, இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

4. திரு.E. சிவக்குமார், S/o.ஈஸ்வரன், புன்னம்:

எனது பெயர் சிவக்குமார். நான் புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

5. திரு.V. ஐயப்பன், S/o.வேல்மணி, தான்தோன்றிமலை:

எனது பெயர் ஐயப்பன். நான் தான்தோன்றிமலையில் இருந்து வருகிறேன். இந்தக் குவாரியினால் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லை. எனவே, இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

6. திரு.G. மனோஜ்குமார், S/o.கோவிந்தராஜ், கந்தம்பாளையம்:

எனது பெயர் மனோஜ்குமார். நான் கந்தம்பாளையத்தில் இருந்து வருகிறேன். இந்தக் குவாரியினால் எங்கள் ஊர் மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. எனவே, இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

7. திரு.S. தேவேந்திரன், S/o.சசிக்குமார், கந்தம்பாளையம்:

எனது பெயர் S.தேவேந்திரன். நான் கந்தம்பாளையத்தில் இருந்து வருகிறேன். இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

8. திரு.V. ராஜேஷ், S/o.T.K. விஜயன், கரூர்:

இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

9. திரு.M. ஹரிதரன், S/o.முருகேசன், பவித்திரம்:

எனது பெயர் ஹரிதரன். ராம் ப்ளூ மெட்டல்ஸ் குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

10. திரு.S. மணிகண்டன், S/o.சிவக்குமார், புன்னம்:

எனது பெயர் மணிகண்டன். புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். குவாரி இயங்குவதற்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

11. திரு.S. செந்தில், S/o.சுப்பிரமணியம், குளத்தூர்பட்டி:

இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

12. திரு.D. ராஜா, S/o.துரை, குட்டக்கடை:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் ராஜா. இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

13. திரு.K. ரமேஷ், S/o.கந்தசாமி, பவித்திரம்:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் ரமேஷ். நான் பவித்திரத்தில் இருந்து வருகிறேன். இந்த குவாரியை நம்பபித்தான் பல குடும்பங்கள் உள்ளன. எனவே, இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் எந்த ஆட்சேபனையும் எங்களுக்கு கிடையாது என்று கூறினார்.

14. திரு.S. சுரேஷ், S/o.சுப்பிரமணி, பவித்திரம்:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் சுரேஷ். நான் பவித்திரத்தில் இருந்து வருகிறேன். இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

15. திரு.N. குமரேசன், S/o.நல்லசாமி, பவித்திரம் மலச்சிபுதூர்:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் குமரேசன். இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

16. <u>திரு.S. பாலகிருஷ்ணன், S/o.சுப்பிரமணி, பஞ்சையம்பட்டி:</u>

என் பெயர் S. பாலகிருஷ்ணன், நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் க.பரமத்தி ஒன்றிய செயலாளர். இந்தக் கல்குவாரியானது நீண்ட கால அனுபவத்தைக் கொண்டது. கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக 1990–ல் இருந்து இந்தப் பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த குவாயைச் சுற்றுப்புற பகுதியில் உள்ள விவசாயிகளுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ எந்த வி இடையூறும் இல்லாமல் இந்தக் குவாரி இயங்கிக் கொண்டிருக்கிறது. இதுவரை எந்த பாதிப்பும் இல்லாமல் செயல்பட்டு கொண்டிருக்கிறது. எனவே இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

17. <u>திரு.N. கதிர்வேல், S/o. நடராஜன், குமர கவுண்டன்புதூர்:</u>

அனைவருக்கும் வணக்கம். இந்தக் கல்குவாரிக்கு இயங்குவதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

<u>மாவட்ட வருவாய் அலுவலர்:</u>

அனைவருக்கும் வணக்கம். தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் துறை வாயிலாக கரூர் மாவட்டம், புகளூர் வட்டத்தில் தற்போது நடைபெற்று முடிவடையவுள்ள இந்த பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கக்கூடிய சம்பந்தப்பட்ட கல் குவாரிகள் உரிமையாளர்கள் தி/ள். பிரபாகரன் மற்றும் தி/ள். ராம் ப்ளூ மெட்டல்ஸ் நிறுவனங்களையும், சம்பந்தப்பட்ட திட்ட ஆலோசகர்களையும், சுற்றுச்சூழல் துறையுடைய செயற்பொறியாளர் அவர்களையும் மற்ற துறை அலுவலர்களையும், காவல்துறை அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரையும் நிர்வாகம் சார்பாகவும் வரவேற்று இந்தப் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திலேயே பொதுமக்கள் வழங்கியுள்ள இந்தக் கருத்துக்களை தொகுத்து நாம் சென்னைக்கு அனுப்பிய பிறகு SEIAA எனப்படும் மாநில அளவிலான கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்பட்டு இதற்கான உத்தரவு வழங்கப்படும். எனவே பொதுமக்களிடம் நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுவது உங்கள் கருத்துக்கள் இங்கே பதிவு செய்யப்பட்டுவிட்டது. எழுத்துப் பூர்வமாக உங்கள் கடிதங்களும் இங்கே பெறப்பட்டது. இதில் ஏதேனும் கோரிக்கைகள் இருக்கும்பட்சத்தில் சுற்றுச்சூழல் துறையை அணுகி தங்கள் மனுக்களை கொடுக்கலாம். இந்த மனுக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நிர்வாகம் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>

இறுதியாக நன்றி உரையில் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தினுடைய கருத்தானது காலை முதல் மதியம் வரை நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் குறுத்தட்டுகள் மூலம் பதிவு செய்து, தமிழ் மற்றும் ஆங்கில வடிவமைப்பில் ஆட்சித் தலைவர் அவர்கள் ஒப்புதலுடன் மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுமம், சென்னை அவர்களுக்கு அனுப்பி

வைக்கப்படும் என்பதை பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இத்தோடு இந்த பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது இனிதே நிறைவடைகிறது. நன்றி என்று கூறினார். அத்துடன் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கரூர் மாவட்டம்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
கரூர் மாவட்டம்.